[12th February 1958

SRI V. K. KOTHANDARAMAN : ஒவ்வொரு ராஜ்யத்திலும் போலீஸ் படை இருக்கும்போது ஒரு ராஜ்யப் போலீஸ் படையை இன்னொரு ராஜ்யத்திற்குக் கொண்டுபோவதற்குக் காரணம் என்ன ? அந்த ராஜ்யத்திலுள்ள போலீஸ் படை அந்த அரசாங்கத்தார் சொல்லக்கூடிய வார்த்தைக் கிணங்கி சுடமாட்டார்கள், அடிக்கமாட்டார்கள் என்று . . .

MR. SPEAKER : கேள்வியின் மூலம் தகவல் கேட்கலாம் என்றும், கேள்வியில் இன்ஸினுவேஷன்” இருக்கக்கூடாது என்றும் முன்பே சொன்னேன். ஆகையால் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக்கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விசேஷ அவசியத்திற்காகக் கோரும்போது ஒரு ராஜ்யம் இன்னொரு ராஜ்யத்திற்குப் போலீஸ் உதவி செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

SRI K. ANBAZHAGAN : மலபார் பிரிந்து கேரள ராஜ்யத்துடன் சேர்ந்திருக்கிறது. அஸ்ஸாமிலுள்ள மலபார் போலீஸ் மட்டும் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்ததாகவே உள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மலபார் பிரிந்த பிறகு மலபார் போலீஸ் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்ததாகத்தான் இருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : அஸ்ஸாமிற்கு அருகே இதர பல ராஜ்யங்கள் இருக்க, அவைகளுடைய போலீஸ் படைகளை அங்கே அனுப்பாவிட்டாலும், மத்திய சர்க்காரின் ராணுவத்தை அங்கே அனுப்பியிருக்க முடியும் என்ற நிலையில், சென்னையிலிருந்து போலீஸ் படையை அங்கே அனுப்பவேண்டிய முக்கியத்துவம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன் : நமது ராஜ்யம் மட்டுமின்றி இதர 4-5 ராஜ்யங்கள் தங்கள் தங்கள் போலீஸ் படையை அங்கே அனுப்பியிருக்கின்றன. ராணுவத்தாரின் உதவியைப் பெற முடிந்தாலும், நமது ராஜ்யப் போலீஸின் உதவியும் அங்கே ஓரளவு வேண்டியிருந்ததால், இங்கிருந்தும் போலீஸ் படை அனுப்பப்பட்டிருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை ராஜ்ய அரசாங்கத்தாரே தங்கள் ராஜ்யத்திற்கு ஆந்திராவிலிருந்து போலீஸ்காரர்களை வரவழைக்க வேண்டிய நிலையில், அஸ்ஸாமில் இதுவரையில் இந்த ராஜ்யப் போலீஸ் படையை வைத்திருப்பதற்குக் காரணம் என்ன ?

MR. SPEAKER : I disallow this question, because this has nothing to do with the main question. There is insinuation in the supplementary question. I therefore disallow it.

Higher Technological Institute at Madras.

* 67 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Union Government have sanctioned the setting up of a Higher Technological Institute at Guindy;

(*b*) the technologies that will be taught in this institute;

(*c*) the subsidy given by the Union Government in this behalf; and

(*d*) whether this amount is the same as that received by Kanpur?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government of India have decided to establish the Southern Higher Technological Institute at Madras.

12th February 1958]

(*b*) Information has not been received from the Government of India on this point.

(*c*) The institution will be the Government of India Institution. Madras will provide the lands required. Details of other financial arrangements are not known.

(*d*) Does not arise.

Cultivable waste lands in the Coimbatore district.

* 68 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-20 a.m.

(*a*) with reference to question No. 114 answered on 8th November 1957, the number of agriculturists who are cultivating lands paying sivayijama in Gobichettipalayam and Bhavani taluks and the acreage cultivated by them;

(*b*) the number of agriculturists who have requested the Government to grant them patta for those lands; and

(*c*) the number of agriculturists to whom pattas have been granted?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*), (*b*) & (*c*) The particulars have been called for.

SRI P. G. MANICKAM : சிவாயிஜாமா செலுத்திக்கொண்டு சர்க்கார் தரிசுகளில் உழுது வருபவர்கள் ஹரிஜனங்களாவர். இவர்கள் நிலத்தை நன்கு உழுதுவதால் அவர்களுக்கு சொந்தமாக பட்டா செய்துகொடுக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி தகவல் கேட்கப்பட்டிருக்கிறது தகவல் வந்தவுடன் அப்பொழுது நிலைமை என்னவென்று தெரியும்.

Assignment of lands in Tindivanam taluk.

* 69 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of petitions received from the Harijans for the assignment of cultivable waste lands from 1955 yearwar in Tindivanam taluk, North Arcot district; and

(*b*) the extent of such lands assigned so far yearwar?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Here also, Sir, the particulars have been called for.

SRI A. R. MARIMUTHU : சர்க்கார் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதற்கு அந்த நிலங்களுக்கு ஒரு தொகை நிர்ணயித்து அதைக் கட்டவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு ஒன்று இருப்பதால் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கும்போது அவர்கள் நிலம் உள்ளவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கட்டவேண்டியிருப்பதால் அந்த நிலத்தை வாங்கியும், அதை பணம் வாங்கியவருக்கு கிரயம் செய்து கொடுக்கவேண்டியிருப்பதால் அந்நிலம் இல்லாதவருக்குப் போய் சேரவேண்டியதற்குப் பதிலாக நிலம் உள்ளவர்களுக்குத்தான் போய் சேருகிறது. ஆகவே யாதொரு கிரயமும் இல்லாமலேயே அவைகளை தானமாக பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர்கள் கேட்பது புதுக் கேள்வி. தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.